பக்கங்கள் 19+ 03

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | சித்திரை 03 புதன்கிழமை 16.04.2025 | அதிர்வு 256

## கோர விபத்தில் இருவர் மரணம்

### மேலும் இருவர் படுகாயம்

குருநாகல் – தம்புள்ளை ஏ – 6 வீதியில் இடம்பெற்ற விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் இருவர் படுகாயமடைந்துள்ளனர் 03

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



### தற்காலிகப் பின்னடைவுகளுக்காக

# நிரந்தர வெற்றியை இழக்கவே முடியாது!

### பரப்புரைக் கூட்டத்தில் சிறீதரன் எம்.பி. தெரிவிப்பு

தற்காலிகப் பின்னடைவுகளுக்காக நாம் நிரந்தர வெற்றியை இழக்க முடியாது என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவரும் யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

நடைபெறவுள்ள உள்ளூர் அதிகார சபைகள் தேர்தலை முன்னிட்டு, கரைச்சி பிரதேச சபையின் உதயநகர் வட்டார வேட்பாளர்களை ஆதரித்து நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற தேர்தல் பிரசாரக்கூட்டத்தில்உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். 02

## பிள்ளையானின் வழக்கறிஞராக கம்மன்பில நியமனம்: இது மோசமான குற்றங்களின் தீவிரத்தைக் காட்டுகின்றது

### அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ சுட்டிக்காட்டு

பிள்ளையானின் வழக்கறிஞராக உதய கம்மன்பில நியமிக்கப்பட்டதன் மூலம் கடந்த காலங்களில் நடந்த மோசடி, ஊழல் மற்றும் கொலைகள் எவ்வளவு தீவிரமானவை என்பது தெளிவாகின்றது என்று அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

கண்டியில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கையிலேயே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

அதன்போது தொடர்ந்து 02





# தந்தை, மகன் படுகொலை: சகோதரர்கள் இருவர் கைது!

வீடொன்றில் தந்தை மற்றும் மகன் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டுப் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் சகோதரர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் இன்று தெரிவித்தனர்.

அநுராதபுரம் – இராஜாங்கனை பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் கடந்த 12 ஆம் திகதி இடம்பெற்ற சம்பவம் தொடர்பிலேயே மேற்படி இருவரும் இராஜாங்கனைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இராஜாங்கனை பிரதேசத்தைச் சேர்ந்த 56 வயதுடைய தந்தையும், 26 வயதுடைய மகனுமே படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

இந்தப் படுகொலைச் சம்பவம் தொடர்பில் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் 27 மற்றும் 23 வயதுடைய இரண்டு சகோதரர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொலை செய்யப்பட்ட தந்தையும் மகனும் பல ஆண்டுகளுக்கு முன்னர் சந்தேகநபர்களின் தந்தையைத் தாக்கி கொலை செய்துள்ளனர் என்று பொலிஸ் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை இராஜாங்கனைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## நிரந்தர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் உரையாற்றுகையில்,

“தமிழினப் படுகொலைக்கான நீதியைக் கோரிப் பெற்று, எமது அரசியல் இலக்கை அடையும் வரை தொடர்ந்து போராட வேண்டிய நிர்ப்பந்தத்திலுள்ள நாம், காலச்சூழலும் – களச்சூழலும் தந்திருக்கும் தற்காலிக பின்னடைவுகளைக் காரணம் காட்டி நிரந்தர வெற்றியை இழக்கும் நிலைக்கு வந்து விடக்கூடாது.

அரசியல் களத்தின் உள்ளும் புறமும் எத்தனை பெரும் சவால்கள் எழுந்தாலும், இலக்கு நோக்கிய எம் பாதையும், பயணமும் அறம் சார்ந்ததாக அமையுமானால் அடைய வேண்டிய அரசியல் உரித்துகளை அடைந்தே தீருவோம்.” – என்றார்.

தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்ட வாலிபர் முன்னணித் தலைவரும் வேட்பாளருமான குணபாலசிங்கம் குணராஜ் தலைமையில் கட்சியின் மூத்த உறுப்பினரும் வேட்பாளருமான கணேசுதுரைலிங்கம் உள்ளிட்ட உதயநகர் வட்டார வேட்பாளர்களை ஆதரித்து நடைபெற்ற மேற்படி கூட்டத்தில், நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்டக் கிளைச் செயலாளர் வீரவாகு விஜயகுமார், கரைச்சி பிரதேச சபையின் மேனாள் தவிசாளரும் வேட்பாளருமான அருணாசலம் வேழமாலிகிதன், வேட்பாளர்களான சாலினி சாருகன், இராசதுரை ஜெயசுதர்சன், யோகேஸ்வரன் நிரோஜன் மற்றும் கட்சியின் வட்டாரக் கிளை உறுப்பினர் தர்மராசா சிறீதரன் ஆகியோர் உரையாற்றியிருந்ததுடன், வட்டாரக் கிளை உறுப்பினர்கள், செயற்பாட்டாளர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பிள்ளையானின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கருத்துத் தெரிவித்த அமைச்சர்,

“இந்த நாட்டில் உதய கம்மன்பில வழக்குகளுக்காக ஆஜராகியமையை பொதுமக்கள் இதற்கு முன்பு பார்த்ததில்லை. ஆனால், பிள்ளையான் தனது வழக்கறிஞராக கம்மன்பிலவைத் தேர்ந்தெடுத்துள்ளார்.

பிள்ளையானின் வழக்கையும் கம்மன்பில கையில் எடுத்துள்ளார். இவை வெறும் அரசியல் படுகொலைகள் அல்ல. இவை ஒரு பெரிய வலையமைப்புக்குள் செயற்படுத்தப்பட்ட விடயங்களாகும். தற்போது இந்த நூல் பந்து கொஞ்சம் கொஞ்சமாக அவிழ்ந்து வருகின்றது.

இலஞ்ச, ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு இப்போது சுறுசுறுப்பாகி, முன்னர் மறைக்கப்பட்ட கோப்புகளை மீட்டெடுத்து வருகின்றது.

குற்றவாளிகள் மீது வழக்குத் தொடரப்படுகின்றது. குற்றப் புலனாய்வுத் திணைக்களமும் வழக்குகள் மற்றும் குற்றச்சாட்டுகளைப் பதிவு செய்யும் பணியைத் தொடங்குகின்றது.

அனைத்து சட்டத் தேவைகளும் தொடர்புடைய நிறுவனங்களால் பூர்த்தி செய்யப்படுகின்றன. அதற்கு அரசு தேவையான வசதிகளை மட்டுமே வழங்கி வருகின்றது.” – என்றார்.



# நாற்றுப் பண்ணையை பார்வையிட்ட ஆளுநர்

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவிலுள்ள கிறீன் லேயர் அமைப்பின் நாற்றுப் பண்ணையை வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் இன்று புதன்கிழமை நேரில் சென்று பார்வையிட்டார்.

அங்கு உற்பத்தி செய்யப்படும் மரக்கன்றுகளை ஆளுநர் பார்வையிட்டதுடன், எதிர்காலத்தில் அந்த அமைப்பு முன்னெடுக்கவுள்ள திட்டங்கள் தொடர்பிலும் நிறுவனத்தினருடன் கலந்துரையாடினார்.

இதன்போது கோப்பாய் பிரதேச செயலர் ச.சிவஸ்ரீயும் இணைந்திருந்தார்.





## கோர விபத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று தொரட்டியாவ பொலிஸார் தெரிவித்தனர்.

தம்புள்ளையில் இருந்து குருநாகல் நோக்கிப் பயணித்த கப் வாகனம் ஒன்று எதிர்த்திசையில் பயணித்த ஓட்டோ மற்றும் மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் ஓட்டோவின் சாரதியும் அதில் பயணித்த இருவரும் மோட்டார் சைக்கிளின் செலுத்துநரும் படுகாயமடைந்த நிலையில் குருநாகல் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் ஓட்டோவின் சாரதியும், ஓட்டோவில் பயணித்த நபர் ஒருவரும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கல்கிரியாகம பிரதேசத்தைச் சேர்ந்த 37 மற்றும் 43 வயதுடைய இருவரே உயிரிழந்தனர்.

இந்த விபத்து தொடர்பில் கப் வாகனத்தின் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைத் தொரட்டியாவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.







# குருநகரில் துருப்பிடித்த நிலையில் துப்பாக்கியும் தோட்டாக்களும் மீட்பு!

யாழ்ப்பாணம், குருநகர் பகுதியில் துருப்பிடித்த நிலையில் ரி - 56 ரக துப்பாக்கி ஒன்று பொலிஸாரால் மீட்கப் பட்டுள்ளது.

குருநகர், ஐந்து மாடிக் கட்டடத் தொகுதிக்கு அருகில் உள்ள படகுத் துறையில் பழுதடைந்த நிலையில் நீண்டகாலமாக கைவிடப்பட்டிருந்த படகு ஒன்றை அந்தப் பகுதி கடற்றொழிலாளர்கள் அப்புறப்படுத்த முனைந்த போது படகின் அடியில் துப்பாக்கி காணப்பட்டுள்ளது.

அது தொடர்பில் யாழ். பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதையடுத்து, சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸ் குழுவினர் துப்பாக்கியை மீட்டதுடன் துப்பாக்கியுடன் ஒரு தொகை தோட்டாக்களையும் மீட்டனர்.

மீட்கப்பட்ட துப்பாக்கி மற்றும் தோட்டாக்கள் நீண்ட காலமாக மண்ணில் புதைத்து வைக்கப்பட்டிருந்தமையால் துருப்பிடித்த நிலையில் காணப் படுகின்றன.

துப்பாக்கி மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.





# விசேட தேவையுடைய மாணவர்களது சித்திரைப் புத்தாண்டு திருமலையில்!





**(ஹஸ்பர் ஏ.எச்.)**

விசேட தேவையுடைய மாணவர்களுக்கான சித்திரை புத்தாண்டு நிகழ்வானது நேற்று (15) திருகோணமலை, மின்சார நிலைய வீதியில் அமைந்துள்ள 'கோப்' நிறுவனத்தில் நடைபெற்றது.

குறித்த நிகழ்வானது 'கோப்' நிறுவனத்தின் பணிப்பாளர் செ.கிருபாகரன் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது 'கோப்' நிறுவனத்தின் செயலாளர் ச.லட்சுமணன், உறுப்பினர் த.ரொகான், பட்டினமும் சூழலும் சமூக சேவைகள் அபிவிருத்தி உத்தியோகத்தர் செ.கௌரிசாந், மனிதவள அபிவிருத்தி உத்தியோகத்தர் தெ. புரபானந்தன் மற்றும் ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர்.



# இளம் குடும்பஸ்தர் வெட்டிக்கொலை!

இளம் குடும்பஸ்தர் ஒருவர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

காலி – கரந்தெனிய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட திவியகஹவெல பிரதேசத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று கரந்தெனிய பொலிஸார் தெரிவித்தனர்.

கொலை செய்யப்பட்டவர் கரந்தெனிய, திவியகஹவெல பிரதேசத்தைச் சேர்ந்த 35 வயதுடையவர் ஆவார்.

தனிப்பட்ட தகராறு காரணமாக இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்தக் கொலைக் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபரைக் கைது செய்வது தொடர்பில் கரந்தெனிய பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.





# மட்டக்களப்பு சிறைச்சாலை கைதிகளின் நலன் மேம்பாட்டுக்கான நீர் வழங்கல்

### ஐ.எம்.எச்.ஓ., யூ.எஸ்.ஏ. ஆதரவுடன் முன்னெடுப்பு

கடந்த வருடம் ஐ.எம்.எச்.ஓ., யூ.எஸ்.ஏ. தலைவர் டாக்டர் இராஜம் தெய்வேந்திரன் அம்மணி கிழக்குக்கு வருகை தந்த போது கைதிகளை, சிறைச்சாலையை பார்வையிட்டு அவர்களுக்கு தேவையான பொழுது போக்கு அம்சங்களாக விளையாட்டு உபகரணங்கள், ரீ.வி. என்பவற்றை வழங்கியிருந்தார்,

இந்த நிலையில் சிறைச்சாலை அத்தியட்சகர் பிரபாகரனின் கோரிக்கைக்கு ஏற்ப கைதிகளுக்குத் தேவையான நீர்வழங்கல், குளாய் நீர் குளியல் தொகுதி, மலசலகூட வசதிகள் மற்றும் சுகாதார மேம்பாட்டுக்கான செயற்பாடுகளை செய்வதாகத் தெரிவித்திருந்தார்.

இதற்குரிய வேலைகள் நிறைவடைந்துள்ள நிலையில் அதனை திறந்து வைத்துக் கைதிகளின் நலநோன்பு நடவடிக்கையைச் சிறப்பாக மேற்கொண்டார்.

இந்த நிகழ்வில் டாக்டர் இராஜம் தெய்வேந்திரன், அவரது கணவரும் ஐ.எம்.எச்.ஓ., யூ.எஸ்.ஏ. அமைப்பின் நிரந்தர செயற்குழு உறுப்பினருமான டாக்டர் எஸ். தெய்வேந்திரன் பொறியியலாளர் ஹென்றி அமல்ராஜ், ஐ.எம்.எச்.ஓ. இணைப்பாளர் பிரதீப் காந்த், சிறைச்சாலை அத்தியட்சகர் பிரபாகரன் ஆகியோர் பங்குபற்றியிருந்தனர்.

இந்தத் திட்டங்கள் 2 மில்லியன் ரூபா செலவில் முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## பலிகடா பிள்ளையான்!

ஈஸ்டர் தொடர் குண்டு தாக்குதல்களின் ஆறாம் ஆண்டு நிறைவுக்கு இன்னும் நான்கு நாள்களே எஞ்சியுள்ளன.

இந்தத் தாக்குதலுக்குக் காரணமான பிரதான சூத்திரதாரிகளைக் கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்துவதற்கான நடவடிக்கை எடுப்பதற்கு அநுர குமார திஸநாயக்க தலைமையிலான புதிய அரசுக்கு, இத்தாக்குதலில் பாதிக்கப்பட்ட கிறிஸ்தவர்களின் சார்பில் திருச்சபைத் தலைவர் கர்தினால் மல்கம் ரஞ்சித் கொடுத்த காலக்கெடு இந்த நான்கு நாள்களில் முடிவுக்கு வருகின்றது.

அதற்கிடையில் தாக்குதல் சூத்திரதாரிகளுக்கு எதிராகத் தீர்க்கமான நடவடிக்கை எடுக்காவிட்டால் தங்கள் எதிர்ப்பு நடவடிக்கைகள் மீண்டும் தீவிரமாக ஆரம்பமாகும் என்று கர்தினால் மல்கம் ரஞ்சித் எச்சரித்து இருந்தார்.

அவர் வழங்கிய காலக்கெடு முடிவடையும் நிலையிலும் தன்னுடைய அடுத்த கட்ட செயற்பாடு யாது என்பதை அவர் இன்னும் கோடி காட்டவில்லை. அமைதி காக்கிறார். அதுவே ஒரு செய்தியை வெளிப்படுத்துவதாக இருக்கின்றது.

இந்த விவகாரத்தில், வேறு ஆள்கடத்தல் சம்பவம் தொடர்பாக அண்மையில் கைது செய்யப்பட்டு, பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுப்பு காவலில் வைக்கப்பட்டிருக்கும் சிவநேசதுரை சந்திரகாந்தன் என்று அழைக்கப்படும் பிள்ளையான் மீது குற்றச்சாட்டு விரல் நீளும் பின்புலத்தில், கர்தினால் மல்கம் ரஞ்சித்தின் அமைதி பேணும் போக்கை நோக்க வேண்டியுள்ளது.

இந்தத் தாக்குதலுக்குப் பிள்ளையான் உதவியிருக்கக் கூடும். ஆள்களை ஒழுங்கு படுத்திக் கொடுத்திருக்கக் கூடும். ஆனால் அவர் மீது முழுக் குற்றச்சாட்டை யும் சுமத்தி ஆளும்தரப்பு விலகி விட முடியாது.

ஏற்கனவே தமிழர் தரப்பில் பெரும் அதிருப்திக்கு உள்ளான நபர் பிள்ளையான். கிழக்கு முஸ்லிம்களினால் வெறுக்கப்படுபவர் என்று கூறப்படக்கூடியவர்.

அவரைக் பலிக்கடாவாக்குவதன் மூலம் முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் உட்பட அனைத்துத் தரப்பினரையும் சமாளிக்கலாம்என்றஒருதிட்டம்கட்டவிழ்கின்றதோ என்று பலரும் சந்தேகிக்கின்றனர்.

'செல்லும் செல்லாததெல்லாம் செட்டியார் தலை மீது' என்பார்கள். அதுபோல பிள்ளையான் மீது எல்லாவற்றையும் சுமத்தி, அரசியல் ஆதாயம் தேடும் திட்டம் முன்னெடுக்கப்படுகின்றதோ என்று பல தரப்புகளும் சந்தேகப்படும் சூழ்நிலை உருவாகியுள்ளது.

பிள்ளையான் இக்குற்றத்தில் சம்பந்தப் படவில்லை என்றோ அல்லது சம்பந்தப் பட்டிருக்க மாட்டார் என்றோ கூறுவது நமது கருத்தல்ல. ஆனால் முழு குற்றத் தையும் பிள்ளையான் மீது சுமத்து விட்டு, மற்றத் தரப்புகளை எல்லாம் சமாளித்துத் தாஜா பண்ணுகின்ற திட்டம் முன்னெடுக் கப்படக் கூடாது. அந்த வகையில் காய்கள் நகர்த்தப்படக் கூடாது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறோம்.

ஈஸ்டர் தொடர் குண்டுத் தாக்குதலுக்கு பிள்ளையான் பங்களித்திருக்கலாம். அல்லது அதனுடன் சம்பந்தப்படாமலே இருந்திருக்கலாம். ஆனால் எல்லா குற்றத்தையும் அவர் மீது சுமத்தி, மற்றத் தரப்புக்களைக் காபந்து பண்ணி, அவர்கள் ஆதரவை திரட்டி கொள்ளலாம் என்று ஆட்சித் தலைமை எண்ணக்கூடாது.

முஸ்லிம் தீவிரவாத கட்டமைப்பு இயங்காமல் இத்தகைய தொடர் தாக்குதல் இடம்பெற்றிருக்க முடியாது. அந்தக் கட்டமைப்புக்கு இத்தகைய நவீன ரக வெடிகுண்டு ஆயுதங்கள், கருவிகள் கிடைக்காமல் இத்துணை பெரிய தாக்குதல் ஒரேசமயத்தில், பல இடங்களில் நடத்தப்பட்டிருக்க முடியாது.

ஆக, பிள்ளையானுக்கு வெளியில் வலிமையான சக்திகள் நிச்சயமாக செயற்பட்டிருக்கும். தாக்குதல் நபர்கள் பயன்படுத்திய வெடிகுண்டுத் தொழில்நுட்பம் மிக உயர்தரமானது என்று கூறப்படுகின்றது. இரண்டொரு வருடங்களே இயங்கிய ஒரு முஸ்லிம் தீவிரவாத இயக்கத்தினால் இத்தகைய தொழில் நுட்பத்தை பெறுவது சுலபமானது அல்ல.

இவற்றை எல்லாம் கூட்டிக் கழித்துப் பார்க்கும்போது இந்த நகர்வுகளில் பிள்ளையான் தப்பி தவறி ஒரு சில வீதம் பங்களித்திருக்கக்கூடும், ஆனால் பிள்ளையான் மீது முழு குற்றச்சாட்டையும் சுமத்தி, விடயத்தை மூடி மறைத்து விடும் திட்டத்தை அரசு முன்னெடுக்கக் கூடாது.

# உள்ளூராட்சி சபை தேர்தல் களம்





# சங்குச் சின்னத்தை பலப்படுத்துவதன் மூலம் உங்கள் கிராமத்தையும் பலப்படுத்த முடியும்!

## ஈ.பி.ஆர்.எல்.எப். அமைப்பாளர் குமரேஸ் தெரிவிப்பு

**(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)**

வீட்டுச் சின்னத்தில் நாங்கள் பல வருடங்கள் பயணம் செய்தோம். அந்த வீடு இன்று தமிழரசுக் கட்சியின் தனி சின்னம் என்பதால் அந்த வீடு இன்று தனியாக சென்று விட்டது. ஆனால் இன்று ஐந்து கட்சிகள் இணைந்து எமக்கான ஒரு பொதுச் சின்னமாக சங்கு சின்னத்தில் பயணித்துக் கொண்டிருக்கிறோம்.நாங்கள் கூட்டமைப்பாக இன்று செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

சங்குச் சின்னத்தை நீங்கள் அனைவரும் ஒன்றிணைந்து பலப்படுத்துவதன் மூலம் உங்கள் கிராமத்தையும் மன்னார் நகரத்தையும் பலப்படுத்த முடியும்.

ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் அங்கத்துவ கட்சிகளில் ஒன்றான ஈ.பி.ஆர்.எல்.எப். கட்சியின் மாவட்ட அமைப்பாளர் எஸ்.ஆர். குமரேஸ் தெரிவித்துள்ளார்.

ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி சார்பாக மன்னார் நகர சபை தேர்தலில் போட்டியிடும் மன்னார் எழுத்தூர் வட்டார வேட்பாளர்களை ஆதரித்து மன்னார் பெரியகமம் பகுதியில் தேர்தல் பிரச்சார கூட்டம் இடம்பெற்றது.

இதன்போது கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனநாயகத் தமிழ் தேசிய கூட்டணி எதிர்வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் மன்னார் நகர சபையை வெற்றி பெற்றுக் கைப்பற்றும் போது மன்னார் நகர சபையின் தலைவராக இங்குள்ள டானியல் வசந் தெரிவு செய்யப்படுவார்.

ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி மன்னார் நகர சபை யை கைப்பற்றுகின்ற போதே இந்தக் கிராமத்தையும், நகர சபைக்கு உட்பட்ட ஏனைய கிராமங்களையும் அபிவிருத்தி செய்ய முடியும். பல்வேறு கட்சிகள் இன்று உங்களிடம் வாக்கு கேட்டு வந்து செல்கின்றன.

தற்போது இடம்பெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தல் உங்கள் கிராமங்களை அபிவிருத்தி செய்ய வேண்டிய ஒரு தேர்தல். இந்தத் தேர்தலுக்காக பல்வேறுபட்டவர்கள் உங்களிடம் வருகிறார்கள். எந்தக் கட்சிக்கு வாக்களிப்பதன் மூலம் எமக்கு பயன் உள்ளது என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

ஜனாதிபதி தேர்தலிலும், அதைத் தொடர்ந்து நாடாளுமன்றத் தேர்தலிலும் அனைவரும் விழுந்து என்ன செய்வது என்று தெரியாது இன்று தத்தளித்துக் கொண்டு இருக்கிறார்கள். தற்போது உள்ளூராட்சி மன்றத் தேர்தல் இடம்பெறவுள்ளது. இந்த நிலையில் நீங்கள் மீண்டும் அந்தப் பிழையைச் செய்து தத்தழிக்காது தெளிவுடன் செயல்பட வேண்டும்.

நீங்கள் எல்லாம் தமிழர்கள். எனவே தமிழ் கட்சிகளுக்கு வாக்களிக்க வேண்டும். யாராக இருந்தாலும் பரவாயில்லை. முதலில் தமிழ் கட்சிகளை தெரிவு செய்ய வேண்டும். தமிழர்கள் சிங்கள தேசத்துக்குச் சென்று தேர்தல் கேட்டு வெற்றி பெற முடியுமா என்றால் முடியாது.

ஆனால் இன்று எமது தமிழர் பிரதேசங்களில் எல்லா உள்ளூராட்சி மன்றங்களிலும் பெரும்பான்மைக் கட்சிகள், அதிலும் குறிப்பாக ஆளும் தரப்பு மிகவும் விசமத்தனமான முறையில் இனவாத கட்சி இன்றைய தேர்தல் முறைமையை பயன்படுத்தி வட்டாரத்தில் தமது ஆட்களை நியமிக்காது,தமிழர்களை நியமித்து விட்டு, ஒவ்வொரு சபைக்குள்ளும் சிங்கள உறுப்பினர்களை உள்நிறுத்தி இருக்கிறார்கள்.

தாங்கள் எந்த சபையிலும் வெற்றி பெறமுடியாது என்று அவர்களுக்கு நன்றாக தெரியும். உங்கள் வீட்டு பிரச்சினைகளை நீங்களே தீர்க்க வேண்டும். எனவே சரியான கட்சியை நீங்கள் அடையாளம் காண வேண்டும்.

நாங்கள் யாரையும் குறை கூற வரவில்லை. தமிழ் கட்சிகளுக்கு வாக்களியுங்கள். அதில் தமிழ் கட்சிகளில் எதற்கு வாக்களித்தால் எமது பிரச்சினைகள் தீர்க்கப்படும் என்பதை புரிந்து கொண்டு வாக்களியுங்கள்.

நாங்கள் அன்று முதல் இன்று வரை கூட்டமைப்பாக பயணித்துக் கொண்டிருக்கிறோம்.வீட்டுச் சின்னத்தில் நாங்கள் பல வருடங்கள் பயணம் செய்தோம். அந்த வீடு இன்று தமிழரசுக்கட்சியின் தனி சின்னம் என்பதால் அந்த வீடு இன்று தனியாக சென்று விட்டது.

ஆனால் இன்று ஐந்து கட்சிகள் இணைந்து எமக்கான ஒரு பொதுச் சின்னமாக சங்கு சின்னத்தில் தமிழர்கள் எல்லோரும் ஒன்றிணைந்து பயணித்துக் கொண்டிருக்கிறோம்.

மக்களாகிய நீங்கள் கடந்த காலங்களில் கூறியுள்ளீர்கள் தமிழ் கட்சிகள் எல்லாம் கூட்டாக செயல்படுங்கள் உங்கள் ஒற்றுமைக்கு வாக்களிப்போம் என்று.

அந்த அடிப்படையில் நாங்கள் எல்லோரும் ஒற்றுமையாக இருக்கிறோம்.எனவே ஒற்றுமையின் சின்னமான சங்கு சின்னத்தை நீங்கள் அனைவரும் ஒன்றிணைந்து பலப்படுத்துவதன் மூலம் உங்கள் கிராமத்தையும் பலப்படுத்த முடியும்.– என்றார்.

# உள்ளூராட்சி சபை
# தேர்தல் களம்




## கட்சிக் கிளை அலுவலகங்கள் திறந்து வைப்பு!

(அபு அலா, ஜெபி ஜனார்த்)

அம்பாறை – பொத்துவில் பிரதேச சபைத் தேர்தலில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியில் போட்டியிடும் வேட்பாளர்களின் கட்சிக் கிளை அலுவலகங்கள் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீனால் திறந்து வைக்கப்பட்டன.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் பொத்துவில் பிரதேச மத்திய குழுத் தலைவர் வைத்தியர் ஏ.எம்.எம்.இஸ்ஸதீன் தலைமையில் வேட்பாளர்களின் கட்சிக் கிளை அலுவலகத் திறப்பும் மக்கள் சந்திப்பும் இடம் பெற்றன. இந்த நிகழ்வில், கட்சியின் உயர்பீட உறுப்பினர்கள், அம்பாறை மாவட்ட முக்கியஸ்தர்கள், பொத்துவில் பிரதேச மத்திய முழு உறுப்பினர்கள் மற்றும் ஊர்ப் பிரமுகர்கள், பொது மக்கள் எனப் பலரும் பங்கேற்றிருந்தனர்.



## மக்கள் கட்சிக்காவே உள்ளனர்!

### முன்னாள் உதவித் தவிசாளர் தாஜுதீன் தெரிவிப்பு

(அபு அலா )

சுமார் 40 ஆண்டு காலமாக எந்தவொரு அரசியல் அதிகாரமும் இல்லாமல் கவனிப்பாரற்றுக் கிடந்த பொத்துவில் பிரதேச மக்களுக்கான அதிகாரம் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியால் கிடைக்கப் பெற்றதை தக்கவைத்துக்கொள்ள முடியாமல் போய்விட்டது என்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் உயர்பீட உறுப்பினரும் முன்னாள் உதவித் தவிசாளருமான ஏ.எம்.எம்.தாஜுதீன் தெரிவித்தார்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் பொத்துவில் பிரதேச மத்திய குழுத் தலைவர் வைத்தியர் ஏ.எம்.எம்.இஸ்ஸதீன் தலைமையில் பொத்துவில் பிரதேச கிளை அலுவலகத் திறப்பு விழாவும், பொது மக்கள் சந்திப்பும் இடம்பெற்றன. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது பிரதேசத்துக்கு 40 வருடங்களுக்குப் பின்னர் கிடைக்கப்பெற்ற அந்த நாடாளுமன்ற அதிகாரத்தை வைத்துக் கொண்டு கட்சிக்கும், அதன் தலைமைக்கும் எதிரான செயற்பாடுகளில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம்.முஷாரப் உள்ளிட்ட குழுவினர் ஈடுபட்டனர்.

கட்சியையும், அவரையும் நம்பி வாக்களித்த எமது மக்களுக்கு, அவர் செய்த துரோகத்தனத்தை சொல்லால் வர்ணிக்க முடியாது. அந்தளவுக்குத் துரோகத்தை செய்துவிட்டார்.

அதை ஏற்றுக்கொள்ள முடியாதளவு இருந்த எமது மக்கள் கடந்த பொதுத் தேர்தலில் நல்லதொரு பாடத்தை அவருக்குக் கற்பித்துக் கொடுத்தனர்.

நம்பிக்கைக்கு துரோகம் செய்தவர்கள் ஒருபோதும் நிலையாய் நின்ற வரலாறு கிடையாது. இப்போது முஷாரப் எங்கே? அவரின் குழுவினர் எங்கே? அவரும் அவரின் குழிவினரதும் நாமத்தை மக்கள் அடியோடு அழித்து விட்டனர்.

பொத்துவில் பிரதேச மக்கள் முஷாரப் என்ற ஒரு தனி நபருக்காக ஒரு நாளும் இல்லை என்பதையும், கட்சிக்காகவே உள்ளனர் என்பதையும் மிகத் தெளிவான பதிலடியை கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் எடுத்துக் காட்டினார்கள். அதேபோன்று இந்தப் பிரதேச சபைத் தேர்தலிலும் காட்டவுள் ளனர்.– என்றார்.

## உள்ளூராட்சி சபை
# தேர்தல் களம்





# அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தேர்தல் அலுவலகம் திறந்து வைப்பு

**(றிஸ்வான் சாலிஹு)**

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அக்கரைப்பற்று மாநகர மற்றும் பிரதேச சபைத் தேர்தலில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியில் போட்டியிடும் வேட்பாளர்களின் கட்சி அலுவலகம் திறந்து வைக்கும் நிகழ்வும், மக்கள் சந்திப்பும் இடம்பெற்றன.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீனின் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், உயர்பீட உறுப்பினர் எஸ்.எம். சபீஸ், கட்சியின் உயர்பீட உறுப்பினர்கள், அம்பாறை மாவட்ட முக்கியஸ்தர்கள், அக்கரைப்பற்று பிரதேச கட்சியின் மத்திய முழு உறுப்பினர்கள் ஊர்ப்பிரமுகர்கள், பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.








# கழிவுகள் அற்ற ஆரோக்கிய நகரம் தொடர்பில் திறந்த கலந்துரையாடல்

**(நூருல் ஹுதா உமர்)**

'கழிவுகள் அற்ற ஆரோக்கிய நகரம் – திண்மக் கழிவு முகாமைத்துவ அணுகுமுறை' எனும் தலைப்பிலான செயலமர்வும், திறந்த கலந்துரையாடலும் சாய்ந்தமருது பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

பொறியியலாளர் கமால் நிஷாத் ஒருங்கிணைப்பில், சமூக அபிவிருத்திக்கான அமையம் இந்தக் கலந்துரையாடலை ஏற்பாடு செய்திருந்தது.

கொழும்பு மாநகர சபையின் திண்மக் கழிவு முகாமைத்துவ பொறியியல் பிரிவு பணிப்பாளருர் எந்திரி. சஹினா மைஸான் இதில் வளவாளராகக் கலந்து கொண்டார்.

கொழும்பு மாநகர சபை கழிவு முகாமைத்துவம் செய்வதில் கடந்த காலங்களில் எதிர்நோக்கிய சவால்கள் மற்றும் அவை வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்ட விதம் குறித்த விளக்கங்கள் இங்கு காட்சிப்படுத்தப்பட்டன.

மேலும், கல்முனை மற்றும் அதனை அண்மித்த உள்ள உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் பொது நிறுவனங்கள் கழிவுகளை முகாமைத்துவம் செய்வதில் எதிர்நோக்கும் சவால்கள், அவற்றுக்கான சாதகமான தீர்வுகள், மற்றும் இங்குள்ள நிறுவனங்கள் பின்பற்றும் சிறந்த நடைமுறைகள் குறித்த கேள்வி பதிலுடன் கூடிய நிகழ்வாக இது அமைந்திருந்தது.

சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆஷிக் சிறப்பு அதிதியாக கலந்து கொண்ட இந்த நிகழ்வில், கல்முனை ஆதார வைத்தியசாலை பிரதிப் பணிப்பாளர் மற்றும் வைத்தியசாலை உத்தியோகத்தர்கள், பாடசாலை அதிபர் மற்றும் ஆசிரியர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பொதுச் சுகாதார உத்தியோகத்தர்கள் அத்துடன் கல்முனை, சாய்ந்தமருது உட்பட இந்தப் பிராந்தியத்தைச் சேர்ந்த அரச, பொது மற்றும் தன்னார்வ அமைப்புகள் உட்பட ஊடக நிறுவன பிரதிநிதிகளும், சிவில் சமூக செயற்பாட்டாளர்களும், சமூக ஆர்வலர்களும் கலந்துகொண்டனர்.





# பல தசாப்தங்களாகச் சேதமடைந்துள்ள காட்மோர் வீதியைத் திருத்தக் கோரிக்கை

**(மஸ்கெலியா )**

மஸ்கெலியா பிரதேச சபைக்கு உட்பட்ட காட்மோர் பிரதான பாதை சுமார் மூன்று கிலோ மீற்றர் தூரம் வரை மக்கள் பாவனைக்கு உதவாத நிலையில் காணப்படுகிறது. இதனால் அந்தப் பகுதியில் உள்ள மக்கள் மற்றும் வாகன சாரதிகள் போக்குவரத்தின் போது பல்வேறு சிரமங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர் என்று சுட்டிக் காட்டியுள்ளனர்.

இந்த வீதி கடந்த 2018 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் முன்னாள் நல்லாட்சி அரசின் மலைநாட்டு புதிய கிராமங்கள் உட்கட்டமைப்பு அமைச்சர் பழனி திகாம்பரத்தின் நிதி ஒதுக்கீட்டில் மல்லியப்பூ சந்தியில் இருந்து காட்மோர் சந்தி வரை செப்பனிடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு மல்லியப்பூ சந்தியில் இருந்து மோக்கா தமிழ் வித்தியாலயம் வரையான மூன்று கிலோ மீற்றர் தூரம்வரை வீதி அபிவிருத்தி அதிகார சபை பொறுப்பேற்று அதன் பணியை முழுமையாக செய்து முடித்துள்ளது.

மோக்கா பாடசாலை முதல் காட்மோர் சந்தி வரையான மூன்று கிலோ மீற்றர் தூரத்தை பெருந்தோட்ட மனித வள அபிவிருத்தி நிதியம் பொறுப்பேற்று மோக்கா தோட்ட அலுவலகம்வரை மட்டும் செப்பனிட்டு மிகுதியான 1.5 கிலோ மீற்றர் தூரமான வீதி செப்பனிடப்படாமல் குன்றும் குழியுமாகக் காணப்படுகிறது.

குறித்த வீதி குன்றும் குழியுமாக உள்ளதால் கர்ப்பிணி தாய்மார்கள், நோயாளிகள் முதல் பாடசாலை செல்லும் பிள்ளைகள், வாகன சாரதிகள் வரை பல்வேறு சிரமங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

காட்மோர் பகுதியில் பிரசித்தி பெற்ற நீர் வீழ்ச்சியை பார்வையிடுவதற்கு

தொடர்ச்சி▼

# பல தசாப்தங்களாக....

**தொடர்ச்சி▲**

உல்லாச பயணிகள் தினமும் நூற்றுக் கணக்கில் வருகை தருவதை காணக் கூடியதாக உள்ளது.

அவ்வாறு வருகை தரும் உல்லாச பயணிகள் தமது சொகுசு வாகனங்களை இடைநடுவில் நிறுத்தி வைத்துவிட்டு நடந்து செல்ல வேண்டி உள்ளது என்றும் அவ்வாறு நிறுத்தி வைக்கப்படும் வாகனத்தில் உள்ள சில முக்கிய பொருள்கள் களவாடப்படுகின்றன எனவும் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து சம்பந்தமாக சம்பந்தப் பட்ட தரப்பினர் கவனம் செலுத்தி தமக்கான தீர்வை பெற்று தர வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள் ளனர்.

குறிப்பாக இப் பகுதியில் உள்ள காட்மோர் தோட்ட ஆறு பிரிவில் உள்ள பெருந்தோட்ட மக்கள் பெரிதும் பாதிக்கப் பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.





# மாளிகைக்காடு ஜும்ஆ பள்ளிவாசல் ஏற்பாட்டில் இலவச மருத்துவ முகாம்

(பாறுக் ஷிஹான்)

அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது, மாளிகைக்காடு ஜும்ஆ பெரிய பள்ளிவாசல் ஏற்பாட்டில் இலவச மருத்துவ முகாம் பள்ளிவாசல் வளாகத்தில் நடைபெற்றது.

நம்பிக்கையாளர் சபையின் தலைவர் வைத்தியர் எம்.எச்.கே. சனூஸ் காரியப்பர் தலைமையில் சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆசிக், சாய்ந்தமருது, மாளிகைக்காடு ஜும்ஆ பெரியபள்ளி வாசலின் செயலாளரும் பொறியியலாளருமான எம்.எம்.எம். முனாஸ், சாய்ந்தமருது மாளிகைக்காடு வர்த்தக சங்கத்தின் தலைவரும் சாய்ந்தமருது மாளிகைக்காடு ஜும்ஆ பெரிய பள்ளிவாசலின் பிரதி தலைவரும் முபாறக் ரெக்ஸ் நிறுவனத்தின் உரிமையாளருமான எம்.எஸ். எம். முபாறக், சாய்ந்தமருது ஜம்மியத்தில் உலமா சபை தலைவர் மௌலவி எம்.எம்.எம்.சலீம், பேராசிரியர் எம்.ஐ.எம்.ஹிலால், டாக்டர் ஏ.எம். மிஸ்பாஹ், டாக்டர் ஏ.எல்.எம்.நளீம், நம்பிக்கையாளர் சபை உறுப்பினர்களான பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எம்.சுல்பிகார், சமுர்த்தி முகாமையாளர் ஏ.ஆர்.எம்.பர்ஹான், ஏ.எம்.நஜீம், ஓய்வுபெற்ற ரயில்வே உத்தியோகத்தர் ஏ.எல்.எசார் உள்ளிட்ட சாய்ந்தமருது மாளிகைக்காடு ஜும்ஆ பெரிய பள்ளிவாயல் நம்பிக்கையாளர் சபை பிரதிநிதிகளுக்கும் பங்கேற்றிருந்தனர்.

இந்த இலவச மருத்துவ முகாமில் இரத்த அழுத்தம், இரத்தத்தில் சீனியின் அளவு, மிகையான உடற்பருமன் , பொது வைத்தியம் உட்பட பல வைத்திய சிகிச்சைக்கான ஆலோசனைகள் வழங்கப்பட்டன. 200 இற்கும் மேற்பட்ட பொது மக்கள், வர்த்தகர்கள், பெண்கள் கலந்து கொண்டு பயன்களைப் பெற்றனர்.




அத்துடன் இலவச மருத்துவ முகாமில் வைத்திய அதிகாரிகள், சிரேஷ்ட பொது சுகாதார பரிசோதகர்கள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

இந்த இலவச வைத்திய முகாமுக்கு சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலை, சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் என்பன பூரண ஒத்துழைப்பு வழங்கியிருந்தன.



# வெள்ளரிப்பழ விற்பனை அம்பாறையில் அதிகரிப்பு

(பாறுக் ஷிஹான்)

அம்பாறை மாவட்டத்தில் தற்போது நிலவும் வறட்சியான கால நிலை காரணமாக கரையோர பகுதிகளில் பிரதான வீதியோரங்களில் அங்காங்கே வெள்ளரிப்பழம் உட்பட பழவகைகள் அமோகமாக விற்பனையாகி வருகின்றன.

குறிப்பாகச் சம்மாந்துறை – அம்பாறை பிரதான வீதி, கல்முனை – அக்கரைப்பற்று பிரதான வீதியோரங்களில் சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்கள், ஓட்டோகளில் வெள்ளரிப் பழத்தை வியாபாரிகள் கொண்டு வந்து விற்பனை செய்து வருகின்றனர்.

இந்த மாவட்டத்தில் தற்போது நிலவி வரும் வறட்சியான காலநிலை காரணமாக ஏற்பட்டுள்ள உடல் ஊஷ்ணத்தை தவிர்ப்பதற்காக வெள்ளரிப்பழம் உட்பட ஏனைய பழ வகை களை சாப்பிடுவதில் மக்கள் அதிக நாட்டம் கொண்டுள்ளனர்.

இவ்வாறு வெளி இடங்களில் இருந்து அம்பாறை மாவட்டத்துக்கு வரும் பழ வகைகளின் தரங்களை பரிசோதிக்குமாறு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் சஹீலா இஸ்ஸடீன் ஆலோசனைக்கமைய சுகாதார பரிசோதகர்கள் தினமும் சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இது தவிர தற்போது அதிக வெப்பம் காரணமாக அம்பாறை மாவட்டத்தில் வெள்ளரிப்பழத்துக்கு அதிக கிராக்கி ஏற்பட்டுள்ளது. 250 ரூபா முதல் சுமார் 850 ரூபாவரை வெள்ளரிப்பழம் சிறியது முதல் பெரியது வரையான பருமனுக்கேற்ப விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

இந்தப் பழ வகையானது பெரும்பாலும் வெப்பமான



காலங்களிலேயே அதிகமாக அறுவடை செய்யப்பட்டு வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது .பெரும்பாலும் மட்டக்களப்பு மாவட்டத்தின் கிரான்குளம், செங்கலடி, களுதாவளை உள்ளிட்ட பகுதிகளில் இருந்து பெருமளவில் வெள்ளரிப் பயிர் செய்கை பண்ணப்பட்டு வருவதுடன் இவைகள் ஏனைய ஊர்களுக்கு விற்பனைக்காக கொண்டு செல்லப்படுகின்றன.

இதேவேளை, அம்பாறை மாவட்டத்தில் உடல் உஸ்ணத்தை போக்கும் விதமாக பொது மக்கள் வர்த்தக பழம், இளநீர், தோடை, திராட்சை வகைகள், வாழைப்பழங்கள், குளிர்பான நிலையங்களை அதிகமாக நாடிச் செல்வதைக் காண முடிகின்றது.






# கற்பிட்டி நாவுக்கரசர் வித்தியாசாலை இருமாடி கட்டடத் திறப்பு விழா நிகழ்வு

**(கற்பிட்டி எம். எச். எம். சியாஜ்)**

கற்பிட்டி நாயக்கர்சேனை அரசினர் இந்துதமிழ் (நாவுக்கரசர் வித்தியாசாலை) வித்தியாலயத்துக்கு அனைத்துலக மருத்துவ நல அமைப்பின் ( ஐ.எம். எச்.ஓ.) முழுமையான நிதி உதவியின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட இரு மாடி கட்டடத்தின் திறப்பு விழா பாடசாலையின் அதிபர் வீ.ராமநாதன் தலைமையில் இடம்பெற்றது.

நாயக்கர்சேனை மக்களின் வரலாற்று நிகழ்வாக இடம்பெற்ற பாடசாலை கட்டடத் திறப்பு விழாவின் பிரதம அதிதிகளாக புத்தளம் வலயக் கல்விப் பணிமனையின் கல்வி அபிவிருத்தி பிரதி கல்விப் பணிப்பாளர் எம்.ஏ.எம். அனீஸ் மற்றும் திட்டமிடல் பிரிவின் பிரதிக் கல்வி பணிப்பாளர் என்.எம்.ஆர். தீப்தி பெர்ணான்டோ ஆகியோரும் கௌரவ அதிதிகளாக அனைத்துலக மருத்துவ நல அமைப்பின் ஆலோசனைச் சபை உறுப்பினர் வைத்தியர் எஸ். தேவேந்திரன் மற்றும் ஐ.எம்.எச்.ஓ. அமைப்பின் தலைவர் ராஜம் தேவேந்திரன் ஆகியொரும் சிறப்பு அதிதிகளாக மாகோ கல்வி வலயத்தின் பிரதி கல்வி பணிப்பாளர் எஸ்.எச். றிஸ்வி, புத்தளம் வலயத்தின் உதவிக் கல்விப் பணிப்பாளர் எம். கமலேந்திரன், கற்பிட்டி கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஏ.எம். ஜவாத், அனைத்துலக மருத்துவ நல அமைப்பின் இலங்கை வதிவிடப் பணிப்பாளரும் ஓய்வு பெற்ற வலயக் கல்வி பணிப்பாளருமான எம். ராதாகிருஷ்ணன் , ஓய்வு பெற்ற அதிபர் வீ. நடராசா, புத்தளம், சிலாபம் வலயத்தின் பாடசாலை அதிபர்கள், நாவுக்கரசர் வித்தியாலய ஸ்தாபகரின் குடும்ப உறுப்பினர்கள் பாடசாலையின் அபிவிருத்தி குழு உறுப்பினர்கள், பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள், பாடசாலையின் முன் னாள் அதிபர் திருமதி லில்லி ஜெயசீலன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.






குணம்ஸ் சுப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET
1145 Morningside Ave Unit #33,
Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998






# தையிட்டிச் சர்ச்சை தீர்க்கமான முடிவை அறிவிக்குமாறு ஜனாதிபதிக்கு அழுத்தம்

## அவர் நாளை யாழ் வரும் நிலையில் கோரிக்கை

ஏப்ரல் 17 அன்று (நாளை) யாழ்ப்பாணத்திற்கு வருகை தரும் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்காவிடம் அவசர வேண்டுகோள் ஒன்றை முன்வத்திருக்கின்றது 'இலங்கையில் உள்ள தமிழர்களின் நலம் விரும்பிகள்' (WTSL) அமைப்பு.

இது தொடர்பில் அந்த அமைப்பின் சர்வதேச ஒருங்கிணைப்பாளர் ராஜ் சிவநாதன் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்காவுக்கு அவசர வேண்டுகோள் ஒன்றை எழுத்தில் அனுப்பி வைத்துள்ளார். அதில் அவர் தெரிவித்தவை வருமாறு:-

அனைத்து இலங்கையர்களின் நலன் மற்றும் அதிகாரமளிப்பை மேம்படுத்துவதற்காக அர்ப்பணிப்புடன் பல்வேறு சிவில் சமூகக் குழுக்களுடன் தீவிரமாக ஈடுபட்டுள்ள புலம்பெயர்ந்தோர் அமைப்பான இலங்கை வாழ் தமிழர் நலன் விரும்பிகள் சார்பாக, வடக்கு மாகாணத்தின் தையிட்டி பகுதியில் வெளிவரும் ஓர் ஆழமான கவலைக்குரிய விஷயத்திற்கு உங்கள் அவசர கவனத்தை ஈர்க்க நாங்கள் எழுதுகிறோம்.

இந்தப் பிரச்சினை, இராணுவப் படைகளால் தனியாருக்குச் சொந்தமான நிலங்கள் தொடர்ந்து ஆக்கிரமிக்கப்படுவது மற்றும் மதக் கட்டமைப்புகளை அங்கீகரிக்கப்படாத கட்டுமானம் தொடர்பானது. இது சரியான நில உரிமையாளர்களுக்கு துயரத்தை ஏற்படுத்துவது மட்டுமல்லாமல், நல்லிணக்கம், சகவாழ்வு மற்றும் சமூக நல்லிணக்கத்திற்கான தொடர்ச்சியான முயற்சிகளை குறைமதிப்பிற்கு உட்படுத்தும் அச்சுறுத்தலையும் ஏற்படுத்துகிறது.

பல ஆண்டுகளாக பல முறையீடுகள் இருந்தபோதிலும், தையிட்டி அதைச் சுற்றியுள்ள நிலத்தின் கணிசமான பகுதி இராணுவ ஆக்கிரமிப்பின் கீழ் உள்ளது. ஆபத்தான வகையில், சட்டப்பூர்வ உரிமையாளர்களால் மத நோக்கங்களுக்காக நியமிக்கப்பட்ட அல்லது ஒப்புதல் அளிக்கப்படாத நிலத்தில் ஒரு புத்த கோவில் கட்டப்பட்டுள்ளது. மேலும் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருவதாகக் கூறப்படுகிறது. உரிமையாளரின் ஒப்புதல் அல்லது பங்கேற்பு இல்லாமல், இந்தச் சொத்துக்கள் மீது இராணுவத்தின் தொடர்ச்சியான கட்டுப்பாடு காரணமாக அவர்கள் தலையிட சக்தியற்றவர்களாகவே உள்ளனர்.

இந்த நிலைமை அடிப்படை சொத்துரிமைகளை கடுமையாக மீறுவதாகும். மேலும் இலங்கையின் சட்ட மற்றும் நிர்வாக அமைப்புகளில் ஒரு தொந்தரவான இடைவெளியை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. குறிப்பாக, நிலத் தகராறுகளை - குறிப்பாக மத நிறுவனங்கள் மற்றும் அரசு அதிகாரிகள் சம்பந்தப்பட்டவற்றை - நியாயமான மற்றும் பாரபட்சமற்ற முறையில் தீர்ப்பதற்கான வெளிப்படையான மற்றும் பயனுள்ள வழிமுறை இல்லாததை இது வெளிப்படுத்துகிறது.

மேற்கூறியவற்றின் அடிப்படையில், பின்வரும் கோரிக்கைகளை நாங்கள் மரியாதையுடன் சமர்ப்பிக்கிறோம்:-

✦ தையிட்டி பகுதியில் இன்னும் இராணுவ ஆக்கிரமிப்பில் உள்ள அனைத்து தனியாருக்குச் சொந்தமான நிலங்களையும் உடனடியாகவும் நிபந்தனையின்றியும் விடுவிக்க வேண்டும். வெளிப்படையான மற்றும் சுயாதீன விசாரணை நிலுவையில் உள்ள நிலையில் சர்ச்சைக்குரிய நிலங்களில் கோயில் தொடர்பான அல்லது நிறுவன கட்டமைப்புகளின் அனைத்து நடந்து வரும் மற்றும் திட்டமிடப்பட்ட கட்டுமானங்களையும் உடனடியாக நிறுத்தி வைக்க வேண்டும்.

✦ சட்ட வல்லுநர்கள், பாதிக்கப்பட்ட சமூகங்களின் பிரதிநிதிகள் மற்றும் மதத் தலைவர்களைக் கொண்ட ஒரு சுயாதீன சிவில் நில ஆணையத்தை நிறுவுதல் - உரிமையின் உரிமைகோரல்களை ஆராயவும், தற்போதைய நிலப் பயன்பாட்டின் சட்டபூர்வமான தன்மையை மதிப்பிடவும், சமமான தீர்வுகளை முன்மொழியவும்.

✦ எதிர்கால நிலப்பிரச்சினைகள் அனைத்தும் சிவில் அதிகாரிகளால் மட்டுமே கையாளப்படும் என்பதற்கும், ஒவ்வொரு வழக்கிலும் உரிய சட்ட நடைமுறைகள் உறுதி செய்யப்படும் என்பதற்கும் உறுதியான உத்தரவாதம்.

✦ மோதலுக்குப் பிந்தைய பகுதிகளில் சிறப்பு கவனம் செலுத்தி, நில மறுசீரமைப்பு மற்றும் மத அல்லது அரசு தொடர்பான நிலப்பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கான சட்ட கட்டமைப்புகளை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட தேசிய அளவிலான கொள்கை சீர்திருத்த செயல்முறையைத் தொடங்குதல்.

- நீதி, நல்லிணக்கம் மற்றும் சமத்துவமான நிர்வாகத்திற்கான உங்கள் தொடர்ச்சியான அர்ப்பணிப்புக்கு எங்கள் பாராட்டுகளைத் தெரிவிக்க இந்த வாய்ப்பைப் பயன்படுத்த விரும்புகிறோம். இந்த பிரச்சினையில் மத மற்றும் சிவில் சமூகத் தலைவர்களுடன் தொடர்பு கொண்ட நீதி அமைச்சர் ஏற்கனவே எடுத்துள்ள நேர்மறையான நடவடிக்கைகளையும் நாங்கள் அங்கீகரிக்கிறோம். இந்த சைகைகள் நம்பிக்கையைத் தூண்டுகின்றன மற்றும் இந்த சவால்களை அர்த்தமுள்ள வகையில் எதிர்கொள்ள விருப்பத்தை பிரதிபலிக்கின்றன.

இருப்பினும், சூழ்நிலையின் அவசரம் உடனடி மற்றும் தீர்க்கமான நடவடிக்கையைக் கோருகிறது. இந்த விஷயத்தைத் தீர்ப்பதில் நீதி, சட்ட சமத்துவம் மற்றும் அனைத்து சமூகங்களுக்கும் மரியாதை ஆகியவற்றை உறுதி செய்ய உங்கள் தலைமையிடம் நாங்கள் வேண்டுகோள் விடுக்கிறோம்.

அமைதியான, உள்ளடக்கிய மற்றும் ஆக்கபூர்வமான தீர்வுகளை ஆதரிப்பதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம், மேலும் நீடித்த தீர்வை அடைய அனைத்து பங்குதாரர்களுடனும் ஒத்துழைக்க நாங்கள் தயாராக இருக்கிறோம். - என்று உள்ளது





# மட்டு. மாநகர சபை ஏற்பாட்டில் மாபெரும் பட்டத் திருவிழா!

(அபு அலா, த.ஜெபி ஜனார்த்)

தமிழ் சிங்கள சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு மட்டக்களப்பு மாநகர சபையால் ஏற்பாடு செய்யப்பட்ட பட்டத் திருவிழா நேற்று (15) கல்லடி கடற்கரையில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாநகர சபை ஆணையாளர் நா.தனஞ்ஜெயன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வுக்கு பிரதம அதிதியாக மாவட்ட அரச அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரன் கலந்து கொண்டு வெற்றி பெற்றவர்களுக்கான பணப் பரிசில்கள் வழங்கி வைத்தார்.

இந்தப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்ற களுதாவளையைச் சேர்ந்த கலாரூபன் குழுவினர் ஒரு லட்சம் ரூபாவையும், இரண்டாம் இடத்தைப் பெற்ற கலாசார பண்பாட்டுத் திணைக் களத்தைச் சேர்ந்த எஸ்.ரூபேசன் மற்றும் அவரது குழுவினர் 50 ஆயிரம் ரூபாவையும், மூன்றாம் இடத்தைப் பெற்ற ஆரையம்பதியைச் சேர்ந்த எஸ்.குலேந்திரன் மற்றும் ரகு குழுவினர் 25 ஆயிரம் ரூபாவையும் பெற்றுக் கொண்டனர்.

இந்தப் போட்டியில் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் தனியாகவும், குழுவாகவும் பங்குபற்றியமையும் குறிப்பிடத்தக்கது.











# தமிழ்ப்புத்தாண்டு வெற்றிக்கிண்ணத்தை தனதாக்கியது வட்டுவாகல் உதயசூரியன்!

(விஜயரத்தினம் சரவணன்)

முல்லைத்தீவு உதைபந்தாட்ட சம்மேளத்தின் அனுமதியுடன், வற்றாப்பளை செந்தமிழ் விளையாட்டுக்கழகத்தால் நடத்தப்பட்ட அணிக்கு 11 பேர் கொண்ட விலகல் முறையிலான தமிழ் புத்தாண்டு உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் வெற்றிக் கிண்ணத்தை வட்டுவாகல் உதய சூரியன் விளையாட்டுக் கழக அணியினர் தமதாக்கிக் கொண்டனர்.

வற்றாப்பளை, செந்தமிழ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நேற்று (15) இடம்பெற்ற இறுதிப் போட்டியில் முதன்மை விருந்தினராக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் பங்கேற்றார்.

வற்றாப்பளை செந்தமிழ் விளையாட்டுக் கழகத் தலைவர் ச.சதீஸ்கரன் தலைமையில் இடம்பெற்ற இந்த இறுதிப் போட்டி நிகழ்வு விருந்தினர் வரவேற்பு, மங்கல விளக்கேற்றல் உள்ளிட்ட சம்பிரதாய நிகழ்வுகளுடன் ஆரம்பமாகி இடம்பெற்றது.

அந்தவகையில் குறித்த தமிழ் புத்தாண்டு இறுதிப் போட்டியில் இரணைப்பாலை சென்.அன்ரனீஸ் விளையாட்டுக்கழக அணியினரும், வட்டுவாகல் உதயசூரியன் விளையாட்டுக்கழக அணியினரும் மோதினர்.

இத்தகைய சூழலில் வெற்றிக் கிண்ணத்தைப் பெறவேண்டும் என்ற முனைப்புடன் இரு அணி வீரர்களும் மிகச் சிறப்பாகத் தமது திறன்களை வெளிப்படுத்தினர். போட்டி தொடங்கி முடியும் வரை மிகவும் விறுவிறுப்பாக பார்வையாளர்களை ஈர்க்கும் வகையில் இடம்பெற்றது.

இப்போட்டியின் இறுதிவரை இருஅணிகளும் கோல்கள் எதுவும் பெறாத நிலையில், தொடந்து வழங்கப்பட்ட தண்ட உதை மூலம் 5:4 என்ற கோல் கணக்கில் வட்டுவாகல் உதயசூரியன் விளையாட்டுக்கழகம் வெற்றிபெற்று தமிழ் புத்தாண்டு வெற்றிக் கிண்ணத்தைத் தனதாக்கியது.

இறுதிப் போட்டியின் ஆட்ட நாயகனாக இரணைப்பாலை சென்.அன்ரனீஸ் விளையாட்டுக் கழக வீரர் டயான்சன் தெரிவு செய்யப்பட்டார். இந்தத் தொடரின் தொடர் ஆட்ட நாயகனாக வட்டுவாகல் உதயசூரியன் விளையாட்டுக்கழக வீரர் சி.இன்சாத் தெரிவு செய்யப்பட்டார்.

அத்தோடு சிறந்த கோல் காப்பாளராக வட்டுவாகல் உதயசூரியன் விளையாட்டுக்கழக வீரர் பு.அஜித் தெரிவு செய்யப்பட்டார். இத் தொடரின் மக்கள் மனம் கவர் வீரராக வட்டுவாகல் உதயசூரியன் விளையாட்டுக்கழக வீரர் பு. அபிசன் தெரிவுசெய்யப்பட்டார்.

இதேவேளை, இந்தத் தொடரின் சிறந்த அணியாக மாத்தளன் ஒற்றுமை விளையாட்டுக்கழக அணியினர் தெரிவு செய்யப்பட்டனர்.

இந்த நிலையில் இந் நிகழ்வின் விருந்தினர்களால் வெற்றியீட்டிய அணியினருக்கு வெற்றிக் கிண்ணம் வழங்கப்பட்டு, பதக்கங்களும் அணிவிக்கப்பட்டன.

இந்தப் போட்டித் தொடரில் இரண்டாம் நிலையைப் பெற்ற அணியினருக்கும் கிண்ணம் வழங்கப்பட்டு, பதக்கங்கள் அணிவிக்கப்பட்டன.

அத்தோடு இறுதிப் போட்டியில் சிறப்பாகச் செயற்பட்ட வீரர்களுக்குக் கிண்ணம் வழங்கி மதிப்பளிக்கப்பட்டது. இந்தப் போட்டித் தொடரில் சிறந்து விளங்கிய வீரர்களுக்கும், அணியினருக்கும் கிண்ணங்கள் வழங்கப்பட்டு மதிப்பளிக்கப்பட்டது.

புத்தாண்டு வெற்றிக்கிண்ண உதைபந்தாட்ட இறுதிப் போட்டியில் விருந்தினர்களாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் திட்டமிடல் வைத்திய அதிகாரி வைத்தியர் கே.சுதர்சன், கரைதுறைப்பற்று பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் இ.ஜெகதீசன், முல்லைத்தீவு மாவட்ட உதைபந்தாட்ட சமேளன உபதலைவர் ரி. குறிஞ்சிக்குமரன், உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர் பி.ஜி. கே.டிலான், வற்றாப்பளை கிராம அலுவலர் சு.கரிகாலன், கரைதுறைப்பற்று விளையாட்டு உத்தியோகத்தர் வரதன், வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய பிரதம குருக்கள், வற்றாப்பளை மகாவித்தியாலய அதிபர் கே.திருக்குமரன் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.



# சென்னை பொலிஸ் ஆணையர் அலுவலகத்தில் அமைச்சர் பொன்முடி தொடர்பில் பா.ஜ.க புகார்



சைவம், வைணவம் குறித்து சர்ச்சைக்குறிய வகையில் பேசிய அமைச்சர் பொன்முடி மீது சென்னை பொலிஸ் ஆணையர் அலுவலகத்தில் பா.ஜ.க. மாநில செயலாளர் ஏ. அஷ்வத்தாமன் புகார் அளித்துள்ளார்.

அவர் அளித்துள்ள புகார் மனுவில், அமைச்சர் பொன்முடி சமீபத்தில் மேடை ஒன்றில் பேசிய காணொலி சமூக வலைதளங்களில் பரவி வருகிறது. அதில் சைவம், வைணவம் குறித்து, பட்டை அணிதல், திருநாமம் அணிதல் உள்ளிட்ட இந்து தர்ம குறியீடுகளை செய்கையாக காண்பித்து, அமைச்சர் பொன்முடி அவதூறாகவும், கொச்சையாகவும் பேசியுள்ளார். வேண்டுமென்றே ஒரு பிரிவினரின் மனதை புண்படுத்தும் நோக்கத்திலும், இரு பிரிவுகளுக்கு இடையே பகைமையை தூண்டும் வகையிலும் அவரது பேச்சு அமைந்திருக்கிறது.

அதுமட்டுமில்லாமல், ஒரு குறிப்பிட்ட பிரிவினரின் நம்பிக்கைகளை அவமானப்படுத்தி அதன் மூலமாக வேண்டுமென்றே உணர்வுகளை தூண்டி ஒரு குறிப்பிட்ட பிரிவினரை சினமூட்டும் நோக்கத்திலும், சமூக நல்லிணக்கத்தை சீர்குலைக்க முயற்சிக்கும் வகையிலும், பெண்களின் மாண்பை குலைக்கும் விதத்திலும் அவர் பேசியுள்ளார். எனவே, அமைச்சர் பொன்முடி மீது சட்டப்படியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# ‘குட் பேட் அக்லி’ தொடர்பில் இளையராஜா சட்டக் கடிதம்






நடிகர் அஜித் குமார் நடிப்பில் வெளியாகிய ‘குட் பேட் அக்லி’ திரைப்படத்தில் தமது பாடல்களை அனுமதியின்றி பயன்படுத்தியுள்ளதாகத் தெரிவித்து இசைஞானி இளையராஜா குறித்த படத் தயாரிப்பு நிறுவனத்துக்குச் சட்டக் கடிதம் அனுப்பியுள்ளார்.

இளையராஜா தமது சட்டத்தரணி ஊடாக இந்த சட்டக் கடிதத்தை அனுப்பியுள்ளார்.

இந்திய மதிப்பில் 5 கோடி ரூபா இழப்பீடு கோரியுள்ளதாகத் தமிழக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்தத் திரைப்படத்தில் ‘ஒத்த ரூபாயும் தாரேன்’, ‘என் ஜோடி மஞ்ச குருவி’, ‘இளமை இதோ இதோ’ ஆகிய 3 பழைய பாடல்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

இந்நிலையில் படத்தில் இந்த 3 பாடல்களைப் பயன்படுத்தியதற்காக தமக்கு இழப்பீடாக இந்திய மதிப்பில் ரூபா 5 கோடியை இளையராஜா கோரியுள்ளார்.

3 பாடல்களையும் படத்தில் உடனடியாக நிறுத்த வேண்டும் எனவும் 7 நாள்களுக்குள் படக்குழுவினர் நிபந்தனையற்ற மன்னிப்பு கேட்க வேண்டும் என்றும் அந்த சட்டக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# இயக்குநர் எஸ்.எஸ்.ஸ்டான்லி உடல்நலக்குறைவால் காலமானார்



தென்னிந்தியத் திரைப்பட இயக்குநர், நடிகர் எஸ்.எஸ். ஸ்டான்லி காலமானார்

உடல்நலக்குறைவால் நேற்று தனது 58 ஆவது வயதில் அவர் காலமாகியுள்ளார்.

‘ஏப்ரல் மாதத்தில்’, ‘புதுக்கோட்டையிலிருந்து சரவணன்’, ‘மெர்குரி பூக்கள்’, ‘கிழக்கு கடற்கரைச் சாலை’ உள்ளிட்ட பல படங்களை இவர் இயக்கியுள்ளார்.

இதேவேளைக் கடந்த 2007 ஆம் ஆண்டு ஞான. ராஜசேகரன் இயக்கிய ‘ பெரியார் ‘ படத்தில் அறிஞர் அண்ணாவாக இவர் நடித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

அவரது மறைவுக்கு திரையுலகினர் பலரும் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.



# ஹவுதி கிளர்ச்சியாளர்கள் மீது அமெரிக்கா ஏவுகணை தாக்குதல்; 7 பேர் உயிரிழப்பு

ஏமன் தலைநகரில் அமெரிக்கா நடத்தியதாக சந்தேகிக்கப்படும் வான் தாக்குதலில் 7 பேர் உயிரிழந்துள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளது.

மத்திய கிழக்கு கடற்பகுதியில் செல்லும் வணிக கப்பல்களை குறி வைத்து தாக்குதல் நடத்தி வரும் ஹவுதி குழுவிற்கு எதிராக அமெரிக்கா கடந்த ஒரு மாதத்திற்கு மேலாக கடுமையாக தாக்குதலை நடத்தி வருகிறது.

இந்நிலையில் நேற்று முன்தினம் ஏமன் தலைநகரில் அமெரிக்காவின் வான்தாக்குதலில் 7 பேர் உயிரிழந்த நிலையில், 29 பேர் காயம் அடைந்துள்ளனர் என ஹவுதி குழு தெரிவித்துள்ளது.மேலும், அமெரிக்காவின் ஆளில்லா விமானங்களை சுட்டு வீழ்த்தியதாகவும் ஹவுதி குழு தெரிவித்துள்ளது.

வான்தாக்குதல் நடத்தப்பட்டது தொடர்பான காணொலியை ஹவுதி வெளியிட்டுள்ளது. இருந்த போதிலும் அமெரிக்க இராணுவ அதிகாரிகள் இது தொடர்பாக தகவல் எதுவும் வெளியிடவில்லை.

கடந்த 2023 ஆம் நவம்பர் மாதத்தில் இருந்து 100 இற்கும் அதிகமான வணிக கப்பல்களை குறிவைத்து ஹவுதி தாக்கல் நடத்தியுள்ளது. இதில் இரண்டு கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டுள்ளன. 4 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.





# ட்ரம்பை கொல்ல திட்டமிட்ட 17 வயதான மாணவன் கைது

அமெரிக்க ஜனாதிபதி டொனால் ட்ரம்பை கொலை செய்ய திட்டமிட்ட 17 வயது மாணவனை அந்நாட்டு பொலிஸார் கைது செய்துள்ள சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அமெரிக்காவில் நிகிட கேசப் என்னும் 17 வயது மாணவன், தனது பெற்றோரை கொலை செய்து, சடலங்களை வீட்டில் போட்டு விட்டு, எதுவுமே நடக்காதது போல 3 நாள்களாக பாடசாலைக்கு சென்று வந்துள்ளார்.

இதையடுத்து, கொஞ்சம் கொஞ்சமாக வங்கியில் இருந்த பணத்தை தன்வசமாக்கியுள்ளதுடன் அப்பாவின் காரை எடுத்துக் கொண்டு, 800 மைல் தொலைவில் உள்ள கான்சாஸ் மாநிலம் சென்றுள்ளார்.

இந்நிலையில், அவனது தந்தையின் தாயார் (பாட்டி) தனது மகன் தன்னை 7 நாள்களாக தொடர்பு கொள்ளவில்லை என பொலிஸாருக்கு அறிவித்த நிலையில் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற பொலிஸார் கதவை உடைத்து உள்ளே சென்றவேளை, 2 சடலங்கள் அழுகிய நிலையில் இருந்துள்ளமை அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அத்துடன், உயிரிழந்தவரின் மகன் மற்றும் காரை காணாததையடுத்து மகன் மேல் சந்தேகம் கொண்ட பொலிஸார் அவரை கைது செய்ய உத்தரவு பிறப்பித்துள்ளனர்.

இதனையடுத்து, சந்தேக நபர் கான்சஸ் மாநிலத்தில் ஒரு வீதியில் செல்லும் வேளை, தடைசெய்யப்பட்ட ஒரு வீதியில் சென்றதால் பொலிஸார் மறித்து விசாரித்த போது அவர் சிக்கியுள்ளார்.

மேலும், சந்தேகநபரது வீட்டில் காணப்பட்ட சில தகவல் அடங்கிய புத்தகத்தில், அமெரிக்க ஜனாதிபதியை எப்படி கொலை செய்ய வேண்டும் என்ற குறிப்புகளை எழுதி வைத்திருந்துள்ளமை தெரியவந்துள்ளது.



சந்தேக நபர் ஒரு சிறிய குழுவோடு தொடர்பில் இருந்துள்ளார் எனவும் அந்தக் குழுவில் இருக்கும் ஏனைய நபர்களும் ஜனாதிபதி ட்ரம்பை கொலை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் இருப்பவர்கள் என்பதும் வெளிவந்துள்ளது.

இதனால் பெரும் அதிச்சியடைந்த பொலிஸார் பாரிய தேடுதல் நடவடிக்கை ஒன்றில் இறங்கிய நிலையில், தற்போது டொனால்ட் ட்ரம்புக்கு கொடுக்கப்படும் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

கனடா முரசு

புதன்கிழமை 16/04/2025

## சுகாதார முறைமை தொடர்பில் அல்பெர்ட்டா மக்கள் அதிருப்தி

கனடாவின் சுகாதார சேவைகள் தொடர்பில் அல்பெர்ட்டா மக்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

அல்பெர்டா மக்களின் பெரும்பாலானோர், சுகாதார 03






# கனடிய பல்கலைகளில் கல்வி கற்க ஆர்வம் காட்டும் அமெரிக்கர்கள்

**அமெரிக்காவில் வாழும் மாணவர்கள் அதிகஅளவில்கனடாபல்கலைக்கழகங்களில் கல்வி கற்க ஆர்வம் காட்டி வருகின்றனர் என தெரிவிக் கப்படுகின்றது.**

**இதற்குக் காரணமாக, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் பல்கலைக்கழகங்களுக்கு வழங்கும் மத்திய நிதியை குறைப்பதும், வெளிநாட்டு மாணவர்களின் வீசாக்களை ரத்து செய்வதும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.**

2025 கல்வியாண்டுக்கான பாடநெறிகளுக்காக, மார்ச் 1 வரை அமெரிக்க குடிமக்களிடமிருந்து பெறப்பட்ட முதுநிலை கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள், 2024 ஆம் ஆண்டு முழுவதையும் விட 27 வீதம் அதிகரித்துள்ளதாக பிரிட்டிஷ் கொலம்பியா பல்கலைக்கழகத்தின் வான்கூவர் கிளை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அதேபோல், அதிகரித்திருக்கும் இந்தக் கோரிக்கையை பதிலளிக்க, UBC பல்கலைக்கழகம், சில முதுநிலை பாடநெறிகளுக்கான அமெரிக்க விண்ணப்பங்களை விரைவாக செயலாக்கும் திட்டத்துடன், இந்த வாரம் மீண்டும் நுழைவு விண்ணப்பங்களை திறந்துள்ளது.

கனடாவின் மிகப்பெரிய பல்கலைக்கழகமான டொரொன்டோ பல்கலைக்கழகம், 2025 பாடநெறிகளுக்கான ஜனவரி முடிவுத் திகதிக்கு முன்பாகவே அமெரிக்காவிலிருந்து பெறப்பட்ட விண்ணப்பங்களில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளது.

இந்த விண்ணப்பங்கள் அதிகரித்ததற்கு முக்கிய காரணமாக ட்ரம்ப் நிர்வாகத்தின் கொள்கைளே குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ட்ரம்ப் நிர்வாகம் பல பல்கலைக்கழகங்களுக்கு வழங்கப்படும் நூற்றுக்கணக்கான மில்லியன் டொலர்கள் நிதியை உறைவாக முடக்கியது, மற்றும் பலஸ்தீன ஆதரவு போராட்டங்களில் பங்கேற்ற வெளிநாட்டு மாணவர்களை நாடு கடத்தும் நடவடிக்கைகளையும் மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மேலும் நூற்றுக்கணக்கான மாணவர்களின் வீசாக்களை ரத்து செய்துள்ளது. இதனால், அமெரிக்காவில் பேச்சு சுதந்திரம் மற்றும் கல்வி சுதந்திரம் குறித்த கவலைகள் வெளியிடப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.






# பாலியல் வன்கொடுமை தொடர்பில் இலங்கைத் தமிழர் மீது குற்றச்சாட்டு

கனடாவின் ரொரன்ரோ நகரின் பிக்கறிங் பகுதியில் பல ஆண்டுகளாக இடம்பெற்றதாக கூறப்படும் பாலியல் வன்கொடுமைகளின் சூத்திரதாரியாக இலங்கைத் தமிழர் ஒருவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழ்பூர்வீகத்தைச் சேர்ந்த 44 வயதான மதப்பிரசாரகர் மற்றும் மதக்கற்கைளை வழங்கும் நபரான பிரவீன் ரஞ்சன் என்பவர் மீதே யோர்க் பிராந்திய பொலிஸார் இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ளனர்.

மத ஆய்வுகள் என்ற போர்வையில் மேற்படி சந்தேகநபர் இந்த பாலியல் வன்முறைகளைமேற்கொண்டுள்ளார்.

அவர் மீது ஏழு பாலியல் வன்கொடுமை குற்றச்சாட்டுகளை பொலிஸார் சுமத்தியுள்ளனர்.

கடந்த 2021 ஜனவரி மாதம் முதல் 2024 ஆண்டுவரை, பிக்கரிங் மற்றும் மார்க்கம் பகுதிகளில் இவர் 03




# வாங்கூவர் நகரில் மன்னிப்பு கேட்டு விளம்பரம் வைத்த அமெரிக்க பிரஜை

அமெரிக்க அரசாங்கம் தற்போது கனடாவை கையாளும் முறையால் கவலையடைந்த ஒருவர், கனேடிய நகரொன்றில் விளம்பரமொன்றை காட்சிப்படுத்தி மன்னிப்பு கேட்டுள்ளார்.

வாங்கூவர் நகரில் ஆர்ட் கேலரிக்கு அருகிலுள்ள டிஜிடல் விளம்பர பலகைகளிலேயே அந்த அமெரிக்கர் இவ்வாறு மன்னிப்பு செய்தியை வெளிப்படுத்தியுள்ளார்.

அந்த விளப்பரத்தில் 'அன்புள்ள கனடா, எங்களை மன்னிக்கவும். நாம் மிகவும் வருந்துகின்றோம்.' என மன்னிப்பு கோரியுள்ளார்.

அதேநேரம், இந்த விளம்பரத்திற்கு கீழே 'உங்கள் அமெரிக்க நண்பர்கள்' என கையொப்பமிடப்பட்டுள்ளதுடன் எந்த நிறுவனங்களின் பெயரும் விளம்பரத்தில் குறிப்பிடப்படவில்லை.

மேலும், இந்த விளம்பர இடத்தை வாங்கிய அமெரிக்கர் தனது பெயரை வெளியிட மறுத்துள்ளார்.

இது தனிப்பட்ட மனிதரின் செய்தியாக மட்டுமல்லாது, பலரின் உணர்வை பிரதிபலிக்கிறது என்பதற்காகவே அவரவர் அடையாளத்தை மறைத்துள்ளதாக கூறியுள்ளார்.

விளம்பரம் தொடர்பில் ஊடகமொன்றிடம் அவர் தெரிவிக்கையில், "வடக்கு எல்லைக்கு அப்பால் வாழும் எங்கள் தாக்கத்திற்குள்ளான அண்டை நாடுகளுக்கு, எவ்வளவு அமெரிக்கர்கள் இதனால் வேதனையடைகின்றனர் என்பதையும், கனடாவின் அரசியல் சுயாதீனத்தைக் கௌரவிக்காத சூழ்நிலைக்கு எங்கள் வருத்தத்தையும் தெரிவிக்க விரும்பினேன்"என அவர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், மேற்படி விளம்பர பலகைகளில் இந்த மன்னிப்பு செய்தியை வாங்கூவரில் பாதசாரிகள் பார்த்ததும், ஆச்சரியத்துடன் பதிலளித்துள்ளதுடன் பெரும்பாலானவர்கள் இதைப் பாராட்டியுள்ளனர்.

# பிரபல வாகன உற்பத்தி நிறுவனம் அமெரிக்காவிற்கு மாற்றப்படாது

உலகின் முதனிலை வாகன உற்பத்தி நிறுவனங்களில் ஒன்றான ஹொண்டா நிறுவனமானது, தங்களது கனடா உற்பத்தி மையத்திலிருந்து வாகனங்களை அமெரிக்காவிற்கு மாற்றுவதற்கான எந்தத் தீர்மானமும் தற்போது இல்லை என அறிவித்துள்ளது.

ஹொண்டா தனது கனடா தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யும் CR-V மற்றும் சிவிக் மாடல்களை அமெரிக்காவிலேயே அதிகளவில் உற்பத்தி செய்து, அந்நாட்டு விற்பனைக்கு 90 வீதம் வரை உள்ளூர் உற்பத்தி வாகனங்களை வழங்க திட்டமிடுவதாக ஜப்பானின் நிக்கேய் நிதிச் செய்தித்தாள் முதலில் வெளியிட்டிருந்தது.

அமெரிக்காவில் தற்போது நடைமுறையில் உள்ள புதிய வரி விதிப்புகளின் காரணமாக, ஹொண்டா ஆண்டுக்கு சுமார் 4.6 பில்லியன் அமெரிக்க டொலர் வரி செலுத்த வேண்டிய நிலை உருவாகியுள்ளது.

இது கனடாவில் இருந்து ஏற்றுமதி செய்யும் 300,000 வாகனங்களையும், மொத்தமாக 500,000 வாகனங்களையும் உள்ளடக்கியது.

ஏப்ரல் 3 ஆம் திகதிக்கு முன் இவை வரிவிலக்காக இருந்தன. எனினும், ஹொண்டா இதற்குப் பதிலளிக்கையில், தற்போதைய உற்பத்தி அளவுகளை எவ்வித மாற்றமும் இல்லாமல் தொடர்ந்து பராமரிக்க உள்ளது என



நிறுவனத்தின் பேச்சாளர் கென் சியு உறுதிப்படுத்தியுள்ளார்.

"Alliston, Ontarioவில் உள்ள எங்கள் தொழிற்சாலை முழு உற்பத்தி திறனில் தொடரும். தற்போதைக்கு எவ்வித மாற்றத்தையும் திட்டமிடவில்லை," என அவர் தெரிவித்துள்ளார். இந்த அறிவிப்பை மத்திய மற்றும் மாநில அரசுகளும் உறுதிப்படுத்தியுள்ளன. கடந்த வருடம் ஹொண்டா, Alliston தொழிற்சாலையில் 375,000 வாகனங்களை உற்பத்தி செய்துள்ளது, இங்கு சுமார் 4,200 பேர் பணியாற்றி வருகின்றனர்.



# டொரோன்டோவில் அதிகம் களவாடப்படும் சைக்கிள்

கனடாவில் சைக்கிள்கள் களவாடப்படும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன என சைக்கிளோட்டிகளுக்கு எச்சரிக்க விடுக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பான இடங்களில் சைக்கிள்களை நிறுத்தி வைக்க வேண்டுமென பொலிஸார் அறிவுறுத்தல் விடுத்துள்ளனர்.

டொரோண்டோவில் கடந்த ஆண்டு சுமார் மூவாயிரத்திற்கும் மேற்பட்ட சைக்கிள்கள் களவாடப்பட்டுள்ளன என தெரிவிக்கப்படுகின்றது.

கனடாவில் இளம் தலைமுறையினர் அதிகளவில் சைக்கிளோட்டத்தில் நாட்டம் காட்டி வருகின்றனர் என ஹாலிபெக்ஸ் துணை மேயர் மேன்சினி தெரிவித்துள்ளார்.

அத்துடன், சைக்கிள் என்பது தற்போது ஒரு பரவலான பயண முறையாக மாறியுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில், சைக்கிள் பயன்பாடு அதிகரிப்பதனுடன், சைக்கிள் திருட்டும் நகரங்களில் அதிகரித்து வருவதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

## பாலியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடத்திய ஆன்மீகக் கற்கை அமர்வுகளின் போது ஒருவர் ஆறு முறை பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டுள்ளார்.

அதேபோல கடந்த டிசம்பரில் இன்னொருவர் இவரால் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டுள்ளார் என பொலிஸ் குறிப்பிட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை நீதிமன்றத்தில் முன்னிறுத்தப்பட்ட அவர் மீதான வழக்கு அடுத்த மாதம் விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அவர் மீது பாலியல் வன்முறை முறையீடுகளை வழங்கிய இரண்டு முறைப்பாட்டாளர்களின் அடையாங்களை வெளியிட நீதிமன்றம் தடைவிதித்துள்ளதால் இந்த முறைப்பாட்டாளர்கள் விபரங்கள் எதுவும் தெரியவரவில்லை.

இதற்கிடையே, சந்தேக நபரான பிரவீன் ரஞ்சனின் நிழற்படத்தை வெளியிட்டுள்ள பொலிஸ், இவரது பாலியல் முறைகேடுகளால் பாதிக்கப்பட்டவர்கள் இன்னும் பலர் இருக்கலாம் எனவும் ஐயம் வெளியிட்டுள்ளது.

அவ்வாறாக பாதிக்கப்பட்டவர்கள் யாராவது இருந்தால் அவர்கள் தாமாக முன்வந்து தகவல்களை வழங்க வேணடும் எனவும் அவ்வாறு வழங்கப்படும் விபரங்களின் இரகசியம் பாதுகாப்பபடும் என்றும் பொலிஸ் உறுதியளித்துள்ளது.

## சுகாதார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேவைகளில் தனியார் வழங்குநர்களின் பங்களிப்பினை விரும்புகிறார்கள் என புதிய கருத்துக்கணிப்பு ஒன்று வெளிவந்துள்ளது.

மொன்ட்ரியல் எகனாமிக் இன்ஸ்டிடியூட் சார்பில், Ipsos நிறுவனம் நடத்திய இக்கணிப்பில், கனடாவைச் சேர்ந்த 56 வீத மக்கள் தனியார் மருத்துவ சேவைகளுக்கான அணுகலை அதிகரிக்க முழு ஆதரவு வெளியிட்டுள்ளனர்.

இதில் கியூபெக் மாகாணத்தைச் சேர்ந்த 68 வீத மக்களும், அல்பெர்டா மாகாணத்தைச் சேர்ந்த 62 வீத மக்களும் தனியார் மருத்துவ சேவைகளுக்கு கூடுதல் அணுகல் தேவை என தெரிவித்துள்ளனர்.

கனடா முழுவதும் உள்ள மக்கள், சுகாதார அமைப்பில் தனியார் வழங்குநர்களின் பங்கேற்பை விரும்புகிறார்கள் என்பதை இந்த கருத்துக்கணிப்பு தெளிவாக காட்டுகிறது என MEI நிறுவனத்தின் பொருளாதார நிபுணர் எமனுவேல் பி. ஃபோபேர் தெரிவித்துள்ளார்.



அல்பெர்டா, ப்ரிட்டிஷ் கொலம்பியா மற்றும் கியூபெக் மாகாணங்களின் மக்களில் பெரும்பாலானோர் தற்போதைய அரசு மருத்துவ முறைமை குறித்து அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.